மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காட்டுமன்னார்கோயில்

**முன்னிலை : திரு.M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
காட்டுமன்னார்கோயில்

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை

E.P.28/2018
in
ARC.255/2016

சீட்டு நடத்துபவர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் பி.லிட்
காட்டுமன்னார்கோயில் ...... மனுதாரர்

–எதிர்–

1. கரோலின்
2. ராஜேந்திரன்
3. வியாகுலசாமி .... எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 03.06.2025 அன்று என் முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.மாரியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், 3 வது எதிர்மனுதாரர் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டும், மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ......

**<u>ஆணையுரை</u>**

1. மத்தியஸ்தர் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கிணங்க மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் கண்டுள்ளபடியான எதாகையை செலுத்தாத நிலையில், எதிர்மனுதாரரை கைது செய்து உரிமையியல் சிறையில் வைத்து தொகையை வசூலித்து தர உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவினை உ.வி.மு.ச. கட்டளை 21, விதி 38ன் கீழ் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. மனுதாரர்/ தீர்ப்பு பெற்றவர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :</u>**

மத்தியஸ்தர் வழக்கு எண்.255/2016 கடந்த 07.03.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கிணங்க மனுதாரருக்கு எதிர்மனுதாரர் இம்மனுவில் கண்டுள்ள கணக்கீட்டின்படி தொகை செலுத்த கடமைப்பட்டவராவார். ஆனால் பலமுறை கேட்டும் எதிர்மனுதாரர் தீர்ப்பாணைக்கிணங்க தொகை செலுத்த முன்வரவில்லை. அவருக்கு தீர்ப்பாணையின்படியான தொகையை செலுத்த போதிய வசதி உள்ளது. ஆனால் அவர் தொகை செலுத்த மறுத்து வருகிறார். எனவே, அவரை கைது செய்து உரிமையியல் சிறையில் வைத்து தொகையை வசூலித்து தர ஆணையிடவேண்டும்.

3. போதிய வாய்ப்பளித்த பிறகும் மனுதாரரின் இம்மனுவிற்கு 3வது

எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிருரையும் முன்னிடாமலும், விசாரணை தினத்தில் 3 வது எதிர்மனுதாரர் நீதிமன்றம் வருகையின்றியும் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. தீர்வுக்குரிய பிரச்சினை மனு அனுமதிக்கப்படக்கூடியதா?

5. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. கோப்புகளை பரிசீலனை செய்ததிலும் மத்தியஸ்தர் வழக்கில் கடந்த 07.03.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கிணங்க மனுதாரருக்கு எதிர்மனுதாரர் இம்மனுவில் கண்டுள்ள கணக்கீட்டின்படி தொகை செலுத்த வேண்டியுள்ள நிலையில், எதிர்மனுதாரர்களுக்கு பல ஏக்கர் நிலமும், மாத வருவாயாக நிலத்தின் மூலம் ரூ.20,000/- வருகின்றது எனவும், தீர்ப்புக் கடனை செலுத்தும் அளவிற்கு எதிர்மனுதாரர்களுக்கு வசதியுள்ளது என்பதை மனுதாரர் தன் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளார். மேலும் மத்தியஸ்தர் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பும் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சங்கதிகளை மறுக்கும் விதமாக 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் போதிய வாய்ப்பளித்த பிறகும் எவ்வித எதிருரையும் முன்னிடவில்லை. எனவே அவர் மனுதாரரின் வழக்கினை மறுக்கவில்லை என்றே அனுமானம் கொள்ளவேண்டியுள்ளது. ஆனால் அதே சமயம் மனுதாரர் தன் தரப்பினை தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ள நிலையில் மனுதாரருக்கு அவர் இம்மனுவில் கோரும் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது என்றும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு விடை காண்கிறது.

முடிவில், மனுதாரரின் இந்த மனுவினை அனுமதித்து, மத்தியஸ்தர் வழக்கில் கடந்த 07.03.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கிணங்க மனுதாரருக்கு 3 வது எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்காக 3 வது எதிர்மனுதாரரை கைது செய்து உரிமையியல் சிறையில் வைத்து தொகையை வசூலித்து மனுதாரருக்கு வழங்க உத்தரவிடப்படுகிறது. கட்டளைப்படி 3 தினங்களுக்குள் செலுத்த வேண்டும். கைதிற்கு வாய்தா 01.08.2025.

இந்த ஆணை முழுவதும் என்னால் சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 18 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒம். M. சாம் யூஜின் ஜெபக்குமார்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்டுமன்னார்கோயில்.